
மேலும் இலவச பிரதிகளுக்கும்,
இலவச பத்திரிகை பிரதிகளுக்கும்
எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.




இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk



# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

இதழ் 24

- நீங்கள் அவரை அறிந்திருக்கிறீர்களா ?
- ஒரு நாள் அதிகாலையில்
- தாவீது ராஜாவுக்கு ராஜரீக வாக்குத்தத்தங்கள்

### கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் “கிறிஸ்துவில் சகோதரர்” என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் ‘வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற’ மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

**புது சிருஷ்டி பதிப்பாளர் குழு**

| | |
|---|---|
| லினஸ் டேனியேல் | : தலைமை ஒருங்கிணைப்பாளர் |
| ராஜபட்சம் ஆனந்தா | : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர் |
| பவித்ரா | : நிர்வாகம், உபப்பதிப்பாளர் |

திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ். சந்திர மோகன் மற்றும் திருமதி சாந்தி பவுல் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறையிலிருந்து தெரிந்தெடுத்து மொழிபெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*“இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின” (2. கொரிந்தியர் 5:17).*



# நீங்கள் அவரை அறிந்திருக்கிறீர்களா ?

**தியானம்**



“உங்களுக்கு என்ன தெரியும் என்பது முக்கியமல்ல. ஆனால் யாரைத் தெரியும் என்பதுதான் முக்கியம்” என்ற கூற்று உண்டு. இந்த கூற்றை ஆராய்ந்து பார்த்து, இதிலிருந்து வேதம் நமக்கு என்ன கற்றுத்தருகிறது என பார்ப்போம்.

இந்த கூற்றை சிறிதே மாற்றி அமைத்து ‘‘உங்களுக்கு என்ன தெரியும் என்பது முக்கியமல்ல தெரிந்ததை வைத்து என்ன செய்கிறீர்கள் என்பதே முக்கியம்” என மாற்றி பார்த்தால், அதிகமாக மக்கள் அநேக காரியங்களை அறிந்து / தெரிந்து வைத்திருப்பார்கள். ஆனால் செயல்படுத்தமாட்டார்கள் என்பதே உண்மை. “செயல்படுத்தபடாத அறிவில் வல்லமையில்லை”, ‘‘பிரயோஜனம் இல்லை”.

தெரிந்திருந்தும் / அறிந்திருந்தும் செய்யாமல் இருப்பது பெரிய பாவம் என்று யாக்கோபு தம்முடைய நிருபத்தில் இப்படியாக எழுதியுள்ளார். *“நன்மை செய்ய அறிந்திருந்தும் செய்யத்தக்கவர்களுக்கு செய்யாமலிருப்பது பாவம்’’* என எழுதியுள்ளார். பேதுரு இதைக்குறித்து எழுதும்போது *“நீதியின் மார்க்கத்தை அறிந்தபன்பு, தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தாவர்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும்”* என எழுதுகிறார்.

அறிவு ஒரு பொறுப்பை நமக்கு தருகிறது / கொண்டு வரப்படுகிறது. நமக்கு சரி என்று ஒரு காரியம் தோன்றினால் அதை செய்வது நம்மேல் விழுந்த கடமை. யாக்கோபு இக்குறித்து “நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்” என தெளிவாக எழுதுகிறார். ஆகையால் நாம் இரண்டாவதாக எழுதின கூற்று, அதாவது “உங்களுக்கு என்ன தெரியும் என்பது முக்கியமல்ல, தெரிந்ததை வைத்து என்ன செய்கிறீர்கள் என்பதுதான் முக்கியம்” என்பது தெளிவாக உள்ளது.

ஆனால் முதலாவது சொல்லப்பட்ட கூற்றையும் பார்ப்போம் “உங்களுக்கு என்ன தெரியும் என்பது முக்கியமல்ல, யாரைத் தெரியும் என்பதே முக்கியம்” இந்த கூற்று உலகப்பிரகாரமான காரியங்களில் அரசு ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் உபயோகப் படுத்தப்படுகின்ற கூற்றாகும். இந்த வாக்கியத்திலிருந்து வேதத்தின் அடிப்படையில் நம் பரம தகப்பனின் உறவைப் பற்றி அறிந்துக்கொள்ள எப்படி பயன்படுத்தப்படுகின்றது எனப் பார்ப்போம்.

நம்முடைய சிருஷ்கரைக்குறித்து, இவ்வுலகத்தை சிருஷ்டித்து பாதுகாத்து வருகின்றவராக குறித்து நாம் தெளிவாக அறிந்திருக்கிறோமா? இயேசு கிறிஸ்து அறிந்திருந்தார். அவர் ''நீங்கள் அவரை அறியவில்லை நான் அவரை அறிந்திருக்கிறேன். நான் அவரை அறியவில்லையென்று சொன்னால் உங்களைப்போல் பொய்யனாய் இருப்பேன். நான் அவரை அறிந்திருக்கிறபடியால் அவர் கட்டளைகளை கைக்கொள்ளுகிறேன்'' என்று பரிசேயருக்கும், வேதபாரகருக்கும் கூறினார்.

இதிலிருந்து நாம் அறிந்துக் கொள்ளவேண்டியது என்னதெனில், அனேக மக்கள் கடவுளை அறிந்திருக்கின்றனர் என்று சொன்னபோதும், உண்மையாக அவரை அறியவில்லை. பரிசேயரும் வேதபாரகரும் இயேசு சொன்னதை கேட்டு மூர்க்கமடைந்தவர்களாய் இயேசுவை கொல்ல நினைத்தனர். இயேசு சொன்னது மிகவும் உம்மை அது இன்றும் உண்மையாக உள்ளது. நாம் சற்று சிந்தித்துப் பார்ப்போம் இந்த உலகத்தில் தேவனை / கடவுளை அறிந்திருக்கிறோம் என்று சொல்லும் மக்கள் எத்தனைபேர் அவருடைய வாக்குத்தத்தங்களை அறிந்திருக்கின்றனர். பவுல் அப்போஸ்தலன் இதைக் குறித்து எபேசு சபைக்கு எழுதும்போது அவர்கள் ''அக்காலத்தில் கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தின் உடன்டிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்கள் என்று நினைத்துக் கொள்ளுங்கள்" என்று எழுதியுள்ளார்.

கிறிஸ்துவை அறிந்திருந்தாலும் அவருடைய வாக்குத்தத்தங்களை அறியாதவர்களை "வாக்குத்தத்ததின் உடன்படிக்கைகளுக்கு அந்நியர்" என்றும் "நம்பிக்கையில்லாதவர்கள்" என்றும் "தேவனற்றவர்கள்" என்றும் கூறுகிறார். ஆனபடியால் நாம் முடிவாக சிந்திப்பது என்னவெனில், தேவனை / கடவுளை அறிந்துக் கொள்வது முக்கியம் மற்றும் அவர் கட்டளைகளையும், வாக்குத்தத்ங்களையும் அறிந்திருப்பதும் அவசியம். "யாரை" அறிந்திருக்கிறீர்கள் என்ற பதங்களுக்கு "பிதாவாகிய தேவனை அறிந்திருக்கவேண்டும்" அவரை அறிந்திருந்தோமாகில் ''என்ன அறிந்திருக்கிறோம்'' என்பது அதிக முக்கியமானதாகவே இருக்காது. ஏனெனில் எல்லாம் அவரே.

நாம் உண்மையாகவே உன்னதங்களிலே இருக்கும் பிதாவாகிய தேவனை அறிந்துக்கொள்வோம். அப்படிச் செய்யும்போது அவைகளை அறியவேண்டும் என வரும்போது, அவை தேவனை ராஜ்யத்தைக் குறித்தும், இயேசு கிறிஸ்துவின் நியாயத்தைக் குறித்துமே இருக்கும். இவ்வுலகத்தின் ஞானம் பைத்தியமாய் தோன்றும், தேவனுக்கு முன்பாக ஆகையால், இயேசு கிறிஸ்து கூறினபடியே ''நாம் தேவனை அறிந்திருக்கிறோம் அவருடைய கட்டளைகளை கைக் கொள்கிறோம்". என்று சொல்வோமாக.



# ஒரு நாள் அதிகாலையில்

எங்கள் வேதபாட வகுப்பில் எசேக்கியேல் 24ம் அதிகாரத்தைப் படித்துக் கொண்டிருந்தோம்.



ஒருநாள் அதிகாலையில் தீர்க்கதரிசிக்கு பயங்கரமான செய்தி ஒன்று வந்தது. "மனுபுத்திரனே, இதோ, நான் உன் கண்களுக்கு விருப்பமானவனை ஒரே அடியினாலே உன்னை விட்டு எடுத்துக்கொள்ளுவேன்".

அதன்பின், அன்று காலை வழக்கம் போல் தன் வேலைக்குச் சென்றுவிட்டான். ''விடியற்காலத்திலே நான் ஜனங்களோடே பேசினேன்''. அதன்பின் "ஒரேஅடி". "அன்று சாயங்காலத்தில் என் மனைவி செத்துப்போனாள்".

செப்டம்பர் 11ல் வீழ்த்தப்பட்ட உலக வர்த்தக மையத்தின் இப்போதைய காலியான இடத்தைத் தொலைக்காட்சியில் நம்மில் அநேகர் கண்டு உணர்ச்சி வசப்பட்டதுண்டு. 2001ல் அநேக அன்பான மக்கள் மாண்டுபோனார்கள். மனைவிகள், கணவன்கள், தந்தையர், பிள்ளைகள், ஒரு வியாபார நிறுவனம் தன் 900 பணியாளர்களில் 700 பணியாளர்களை இழந்தது. அந்தப் பயங்கரமான "அடியில்" தங்கள் அன்புக்குரியவர்களை இழந்த அநேகக் குடும்பங்கள் இன்றும் கூட துக்கத்தில் உள்ளனர்.

எசேக்கியேல் தன் மனைவியை நேசித்தாரா? நாங்கள் அந்த அதிகாரத்தை வாசித்தபின், அவர் தம் மனைவியை ஆழமான முறையில், உணர்ச்சி பூர்வமாக நேசித்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தோம். வார்த்தைகள் எளியனவாகத் தான் உள்ளன. ஆனால் ஆற்றல்மிக்க உணர்ச்சியினால் நிரம்பினதாய் உள்ளனத. "உங்கள் கண்களின் விருப்பம்..... அலங்காரத்தின் மகிழ்ச்சி.. ஆத்துமாவின் வாஞ்சை" எங்கள் வேதபாட வகுப்பில் இருந்த சிலர் ஏற்கனவே எசேக்கியேலின் அனுபவத்தைக் கடந்து வந்திருந்தார்கள். ஆகவே அதை நன்கு அறிவார்கள்.

எங்களில் சிலர் அன்பான ஒருவர், குடும்பத்தில் ஒருவர் அல்லது நண்பர் ஒருவரைத் துப்பாக்கிக்கு இரையாகக் கொடுத்திருக்கிறோம். ஆம் எசேக்கியேலின் வேதனையில் நாங்களும் பங்கு கொள்ள முடியும்.

தேவன் குரூரமானவராக எசேக்கியேலுக்கு இப்படிச் செய்தாரா ? அவளுக்கு வயது 30 அல்லது அதற்குச் சற்று அதிகமாக இருக்கும். அவளுக்குத் திருமணமாகி பதினொரு ஆண்டுகள் போலத்தான் ஆகியிருக்கும். இதைக்குறித்துத் தீவிரமாக விவாதித்தோம். ஆம், தேவன் குரூரமாய்த்தான் இருந்தார் என்ற முடிவை அனைவரும் ஆமோதித்தோம். இந்த முடிவை எங்களால் தவிர்க்க முடியவில்லை.

ஆனால் ஏன் ? இங்கே நாங்கள் அதிகமாக சிந்திக்க வேண்டியிருந்தது. "இச்சம்பவம் எனக்கு எதை நினைவுப்படுத்துகிறது தெரியுமா ? தேவனின் நேசகுமாரனுடைய சிலுவை மரணம். அதுவும் இதே போலக் குரூரமானது தானே ?" என ஒரு சகோதரன் கூறினார். நாங்கள் அதை ஆமோதிக்க வேண்டிருந்தது.

அதன்பின் தான் எசேக்கியேல் 24ன் ஆழ்ந்த கருத்து எங்களுக்குத் தெரிந்தது. ''எசேக்கியேல் உங்களுக்கு அடையாளமாயிருப்பான். எசேக்கியேல் சர்வ வல்லமையுள்ள தேவனை அன்பின் தேவனைக் குறித்தவனாக இருந்தான். எசேக்கியேல் தன் மனைவியை நேசித்ததைக் காட்டிலும் தேவன் தம் உடன்படிக்கையின் மக்களை நேசித்தார். இன்னமும் நேசிக்கிறார். தமக்குப் பிரியமான, தமது உடன்படிக்கையின் மக்களை இழந்தது பற்றி தேவன் எவ்வளவாக வேதனைப்பட்டார் என்பதை தேவன் எசேக்கியேலுக்குக் காட்டினார்."

திருமணமான ஒருவனுக்கு நிகழ்ந்த இந்த துக்க சம்பவம், ஐநூறு ஆண்டுகளுக்குப் பின் நம் பரம தகப்பன் தமது நேச குமாரனை உலகிற்கு அனுப்பியபோது, எப்படி உணர்ந்திருப்பார் என்பதை ஓரளவு காட்டுகிறது. ''*அவனுக்குப் பிரியமான ஒரே குமாரன் இருந்தான். என் குமாரனுக்கு அஞ்சுவார்களென்று சொல்லி, அவனையும் கடைசியிலே அவர்களிடத்தில் அனுப்பினான். தோட்டக்காரரோ அவனைப் பிடித்துக் கொலை செய்து திராட்சத் தோட்டத்துக்குப் புறம்பே போட்டு விட்டார்கள்" (மாற்கு 12:6-8).* ஆகவே யார் *குரூரமாயிருந்தார்கள் ?*

எசேக்கியேல் தன் பிரியமான மனைவியின் மறைவை ஏற்றுக்கொண்டது பற்றி நமக்குத் தெரியாது. பிதா தமது குமாரனுக்கு நடந்தது பற்றி, இப்போதும் நடப்பது பற்றி சும்மா இருக்கிறாரா ? அவரின் உயிர்த்தெழுதலுக்குப் பின்னருங்கூட ஆணிக்கடாவிய துளைகள் காணப்பட்டன. இப்பொழுது மகிமையில் வீற்றிருக்கும் போதுங்கூட அவர் கைகளில், கால்களில் ஆணிகள் கடாவப்படுகின்றனவா ?



# தாவீது ராஜாவுக்கு ராஜரீக வாக்குத்தத்தங்கள்

**குறிக்கோள் : கர்த்தருடையராஜ்யம் மற்றும் இயேசுவின் வருகை.**

**ஒரு முக்கிய அதிகாரம்**

குடும்பமாக வேதம் வாசித்து முடித்தவுடன் பிலிப்பு கூறினார், "நாம் இன்று வாசித்த 2 சாமுவேல் 7-ம் அதிகாரம் மிக முக்கியமான அதிகாரம்."



''ஏன் அது அவ்வளவு முக்கியமாக இருக்கிறது ?" என்று விஜி கேட்டாள்.

அவள் தகப்பனார் கூறினார்: ''ஏனெனில், வேதாகமத்திலுள்ள மூன்று முக்கிய உடன்படிக்கைகளின் வாக்குத்தத்தங்களில் மூன்றாவதைக் கொண்டுள்ளது. இவற்றில் முதலாம் உடன்படிக்கை வாக்குத்தத்தம் ஆதியாகமம் மூன்றாம் அதிகாரத்தில் இருக்கிறது. அது "ஏவாளுக்குள்" பிறப்பவர்களுக்கென்று, அவளுடைய ''வித்துக்கு'' **ஜீவனின் நம்பிக்கையாகக்** கொடுக்கப்பட்டது. அடுத்த உடன்படிக்கையின் வாக்குத்தத்தம் ஆதியாகமம். 12,13 மற்றும் 22ம் அதிகாரங்களில் உள்ளது. அதில் "ஆபிரகாமில்" பிறப்பவர்களுக்கென்று **நித்திய சுதந்தரமாகக்** கொடுக்கப்பட்டது. மூன்றாம் உடன்படிக்கையின் வாக்குத்தத்தமானது, இப்போது நாம் வாசித்த அதிகாரத்தில் உள்ளது. அது "தாவீதுக்குள்" பிறப்பவர்களுக்கு நித்திய ராஜரீக அதிகாரம் மற்றும் மரியாதை யாகக் கொடுக்கப்பட்டது. இப்படி அந்த மூன்று உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களாவன: நித்திய ஜீவன், நித்திய சுதந்திரம் மற்றும் நித்தியராஜரீக அதிகாரம் ஆகும்.

"ஆமாம், நீங்கள் "ஏவாளுக்குள்," "ஆபிரகாமில்," "தாவீதுக்குள்" என்று சொன்னீர்களே, அப்படியென்றால் என்ன ?" என்று விஜி கேட்டாள்.

அவள் தகப்பன் பதிலுரைத்தார்: ''அதாவது சொல்லப்பட்ட பேருடையவர்களைச் 'சம்பந்தப்' படுத்தி சொன்னேன். அதன் விளக்கத்தைப்

பொறுமையாய்க் கேள். நாமெல்லாரும் 'ஆதாமுக்குள்' பிறந்தவர்கள். அதனால் அவனுடைய சந்ததி என்றறியப்பட்டுள்ளோம். ஆனாலும் எல்லாரும் "கிறிஸ்துவுக்குள்"ளாகவில்லை. நாம் "கிறிஸ்துவுக்குள்"ளாக வேண்டுமென்றால் புதுசிருஷ்டிகளாகி (2 கொரிந்தியர் 5:17) ஞானஸ்நானத்தின் மூலம் 'கிறிஸ்துவோடு' சேரவேண்டும். நாம் "கிறிஸ்துவுக்குள்"ளாகும் போது, ஆபிரகாம் மற்றும் தாவீதுக்குச் சம்பந்தப்படுகிறோம். ஏனெனில் அவர்கள் கிறிஸ்துவின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் (மத்தேயு 1:1). ஆதலால் நாம் சம்பந்தப்பட்ட குடும்பத்தின் தகப்பன் கடவுளாக இருக்கிறார். இயேசு கிறிஸ்து மூத்த சகோதரனாக இருக்கிறார். ஆபிரகாம், தாவீது மற்றும் விசுவாச வீரர்கள் நம்மைப்போன்று கடவுளின் குடும்பத்தில் அங்கங்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு மகத்தான குடும்பத்தில் அங்கமாக இருப்பது பெரிய சிலாக்கியம். ஆகையால்தான் இந்த அதிகாரத்தை நீங்கள் சரியாகப் புரிந்துக் கொள்ளவேண்டும் என்று விரும்புகிறேன்.



உடனே பீட்டர் மற்றவர்களைக் குறித்து சற்றும் கவலைப்படாமல், "சரி பேசுங்கள் நீங்கள் அளக்கிறதைக் கேட்கிறேன்" என்று சற்று கிண்டலாகப் பேசினான்.

''இந்த அதிகாரம் ராஜா தன் மகிமைக்காகக் கட்டின அரண்மனையில் குடியேறினதிலிருந்து ஆரம்பிக்கிறது,'' என்று பிலிப்பு தொடர்ந்தார்.

''தாவீது தனக்குக் கீழிருந்த அதிகாரிகளினால் மிகவும் புகழப்பட்டிருந்தான். தனக்கிருந்த அற்பசொற்ப பொக்கிஷத்தைக் கொண்டு திருப்தியுள்ளவனாக இருந்தான். இஸ்ரவேலின் சத்துருக்களின் தாக்குதலிலிருந்து ஓய்வு பெற்றிருந்தான். எனினும் அவனைச் சுற்றியிருந்த ஏராளமான சத்துருக்கள் அவனுடைய ராஜ்யபாரம் தணிந்து ஓய்ந்துவிடும், எங்களை ஒடுக்கிப் பணியவைத்தானே என்று யோசித்தனர். ஆனால் தாவீதின் காலத்தில் சமாதானம் நிலவியது."

"நீங்கள் தொடருமுன், தாவீது திருப்தியுள்ளவனாக இருந்தான் என்று ஏன் சொல்லுகிறீர்கள் ?" என்று ராஜன் கேட்டான்.



அவன் தகப்பனார் தன்னைத் திருத்தினவராய், "ஒருவேளை தாவீது திருப்தியுள்ளவனாக இருந்திருப்பான்" என்று தொடர்ந்தார். ஏனெனில் முதல் வசனம் அதைக்குறிப்பிடுகிறது. அவன் தான் தங்கும்படி வசதியான ஒரு மாளிகை கட்டி அதில் அமர்ந்திருக்கையில் யெகோவா தேவனுக்கு ஒரு ஆலயம் கட்டவேண்டும் என்று தீர்மானித்தான். அவன் தீர்மானத்தில் சற்று பெருமை கலந்திருந்ததாகத் தெரிந்தாலும், அது வெகுசீக்கிரத்தில் முறிக்கப்பட்டது. அதை நாம் வாசித்த அதிகாரத்தில் காண்கிறோம். முதல் வசனத்துக்கும் 18ம் வசனத்துக்கும் ஒரு பெரிய முரண்பாடு உள்ளதைக் காணமுடிகிறது. முதல் வசனத்தில் ராஜாவின் மேன்மை அவனுடைய வீட்டில் அமர்ந்திருந்ததில் காட்டுகிறது. ஆனால் பின்னால், யெகோவா தேவனுக்கு முன் நான் ஒன்றுமில்லை என்று அவருடைய ஊழியனாகத் தன்னைத் தாழ்த்துகிறதை நாம் வாசிக்கிறோம்.

தாவீது உத்தமனாக இருந்தாலும், நம்மைப் போலவே பாடுள்ளவனாகவும் பலவீனமுள்ளவனாகவும் இருந்ததால் பாவத்தில் விழுந்தான். வேதாகமம் ஒரு மனிதனுடைய தவறுகளை மாத்திரமல்ல, அவனுடைய நற்குணத்தையும் சுட்டிக்காட்டத் தவறுவதில்லை. நமது குற்றங்களை நாம் காண்கிறதைவிட மிகத் தெளிவாகவும் சரியாகவும் தேவன் பார்க்கிறார்.



"நாத்தானும் கூட அவசரத்தில் தவறு பேசிவிட்டான் அல்லவா" என்று வசந்திகேட்டாள். ''ஏனெனில் தேவனுடைய பெட்டி திரைகளின் நடுவே வாசமாயிருக்கையில் நான் மட்டும் கேதுரு மரங்களினால் செய்யப்பட்ட வீட்டிலே தங்கியிருக்கிறேனே என்று சொன்னவுடன், நாத்தான் தீர்க்கதரிசி, ''உம்முடைய மனதிலே நினைத்தப்படியே செய்யுங்கள்" என்று உத்தரவு கொடுத்தான். பின்பு அவனே வந்து ராஜாவிடம், "கர்த்தர் அதைத் தடுக்கிறார்" என்றும் சொன்னானே," என்றாள்.

பிலிப்பு தனது தலையை அசைத்து, "உண்மைதான், அடிக்கடி மனிதர்கள்

சுய இச்சையின்படியே சொல்லுகிறது போலவே நாத்தானும், “நீர்போய் உம்முடைய இருதயத்தில் உள்ளபடி யெல்லாம் செய்யும்” (வச.3) என்று சொன்னான். அது நல்லதாகத் தோன்றினாலும் மாம்சத்தின்படி எடுக்கிற தீர்மானம் ஆகும். இந்தக் காரியத்தில் அது தவறாகிவிட்டது,” என்று ஒத்துக்கொண்டார். தாவீது கர்த்தருடைய பெட்டியை, அது திரைச்சீலைகளின் நடுவே என்று சொன்னானே. நீங்கள் எங்களிடம் முன்னால் சொன்னபடி கர்த்தருடைய பெட்டி சீயோனிலும் ஆசரிப்பு கூடாரம் கிபியோனிலும் வைக்கப்பட்டிருந்ததல்லவா? (2 நாளாகமம் 1:3) என்று பீட்டர் கேட்டான்.

அதற்கு பிலிப்பு, “வாஸ்தவம்தான். என்றாலும், தாவீது மற்றொரு ‘கூடாரம்’ அல்லது ‘ஆசரிப்பு கூடாரத்தை’ சீயோனில் போடுவித்தான். (1 நாளாகமம் 16:1). அதில் கர்த்தருடைய பெட்டி வைக்கப்பட்டு காக்கப்பட்டது” என்றார்.

“அப்படியா!”

பிலிப்பு பதில் அளிக்கத் தொடர்ந்தார். “தாவீது நாத்தான் தீர்க்கதரிசியிடம் தனது தீர்மானத்தை சொன்னவுடன், அப்படியே செய்யும் என்று உற்சாகப்படுத்தி பேசினான். அன்று ராத்திரி தரிசனத்தில் கர்த்தர் இடைபட்டு நாத்தான்வேலைத் தாவீதிடம் அனுப்பி, அவன் ஆலயம் கட்டுவது தேவசித்தம் அல்ல, என்று கூறினான். கர்த்தருக்கென்று ஒரு ஆராதனை கூடம் நிரந்தரமாகக் கட்டப்படுவது அவருடைய சித்தம் என்பதை தாவீதும் நாத்தான் தீர்க்கதரிசியும் நன்றாகவே தெரிந்து வைத்திருந்தனர் (உபாகமம் 12:5). அவன் சாமுவேலிடம்,





கூடாரத்துக்குப் பதிலாக மேன்மையான ஒரு ஆலயம் எழுப்பப்படும் என்றும், அது எப்போது யாரால் கட்டப்படும் என்று தெரியாது என்றும் சொல்லியிருந்தான். அதை யார் கட்ட வேண்டும் என்ற தெளிவான கட்டளை பிறவாமல் ஆலயம் கட்டுவது தவறாகிவிடும். தாவீதை கர்த்தர் ஒரு எளிமையான ஆட்டுமேய்ப்பனிலிருந்து இஸ்ரவேலின் ராஜாவாக உயர்த்தினதினால், அதைவிட மேன்மையான காரியங்களைச் செய்ய அவன் விரும்பினான். தேவன் மேல் அவன் வைத்திருந்த மகத்தான விசுவாசம் அதற்குக் காரணமாக இருந்தது. ஆனால் ஆலயம் கட்டும்படி கர்த்தர் அவனை அனுமதிக்கவில்லை.”

உடனே வசந்தி அவசரமாக, “ஏன் ஆலயம் கட்டக்கூடாது? என்ன காரணத்திற்காக என்று வேதாகமத்தில் ஏன் எழுதப்படவில்லை?” என்று கேட்டாள்.

அவள் தகப்பனார் நிதானமாக, ‘‘அதற்குக் காரணத்தை இந்த அத்தியாயத்தில் இல்லாவிட்டாலும் வேறு இடத்தில் எழுதியுள்ளார். நான் ஏற்கனவே உங்களுக்கு அறிவித்தபடி, வேதாகமத்தில் எதைக் குறித்து சந்தேகம் வந்தாலும் அதைப்பற்றிய மற்ற பகுதிகளை வாசித்து தெரிந்து கொள்ளுவது சரியானது. நாம் இன்று வாசித்த இந்த அதிகாரத்தின் விளக்கத்திற்கு இந்த சம்பவத்தின் வாக்குத்தத்தம் போன்ற மற்றொரு பகுதி 1 நாளாகமம் 17ம் அதிகாரம் மற்றும் 22:6-10 வசனங்களில் அடங்கியுள்ளது. அதில் தாவீது அதைக் குறித்துப் பேசுவது குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் இறுதி பகுதியில், ஏன் கர்த்தர் தன்னை அனு மதிக்கவில்லை என்று தாவீது விளக்கம் கூறுகிறான். ‘அவனால் அதிகமாய் மனித இரத்தம் சிந்தினதினாலும், அநேக பெரிய யுத்தங்களைச் செய்ததினாலும், அந்த காரணத்தினால் ஆலயம் கட்டாதபடி தேவன் அவனைத் தடுத்தார். ஆயினும், தாவீதுக்குப் பிறக்கப் போகும் மகன் பெயர் சாலொமோன். அவனுக்கு யெகோவா சமாதானமும் அமரிக்கையும் கொடுப்பார். அவன் தேவாலயத்தைக் கட்டுவான்” என்றார்.

“தாவீது ஆலயம் கட்டமுடியாதபடி ‘அது’ சரியான காரணமாக இராது என்று நான் நினைக்கிறேன்” என்று ராஜன் கூறினான்.

“ஏன் அவ்வாறு நினைக்கிறாய்?” என்று அவனது தந்தை கேட்டார்.

ராஜன் பிரதியுத்திரமாக, “இயேசு கிறிஸ்து தமது வருகைக்காக ஒரு பெரிய ஜெபவீட்டைக் கட்டுவார். ஆனாலும் அவர் அர்மகெத்தோன் பள்ளத்தாக்கில் தொடுக்கும் போரில் எவ்வளவு இரத்தம் சிந்தும்படி காரணமாக இருப்பார். (வெளிப்படுத்தல் 19:13)” என்றான்.

“அது சரிதான்” என்ற தகப்பனார் தொடர்ந்தார்: “ஆனால் ஒரு யுத்த மனுஷனாக இருந்துகொண்டு கர்த்தரும் தேவாலயம் கட்டுவதில்லை. யுத்தம் நடப்பது உண்மை என்றாலும், அதைத் தொடர்ந்து பெருத்த சமாதானம்

நிலைகொண்டிருக்கும் ன்பதும் உண்மை ஆகும் (ஆகாய் 2:9). எனவே அவர் சமாதானப் பிரபுவாக இருந்து தேவாலயம் கட்டுவார் (சகரியா 6:12-13 காண்க). தாவீது பண்ணின யுத்தங்கள் யெகோவாவின் யுத்தங்களாகும். அந்த யுத்தங்களினால் அவன் பாவஞ்செய்யவில்லை. ஆனால் அவன் ஆலயம் கட்டும்போது சாலொமோன் ஆட்சியிலிருந்தால், அதனால் தேவாலயத்தின் வடிவமைப்பு பாதிக்கப்படும். இது உனக்குப் புரிகிறதென்று நினைக்கிறேன்!" என்றார்.

"ஆம், இந்த கோணத்தில் அதை நான் நினைத்ததில்லை" என்று ராஜன் ஒத்துக்கொண்டான்.

"நான் சொல்லும் போது நீங்களெல்லாரும் குறிப்பு எழுத விரும்புகிறேன். கடவுள் தாவீதுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன்" எனறார், பிலிப்பு.

''வாக்குத்தத்தத்தின் முதலாவதாக, தாவீது தனிப்பட்ட முறையில் மேன்மையடைவது குறித்துச் சொல்லப்பட்டது. 'உன் பேரைப் பெரிதாக்குவேன்' (வசனம் 9 காண்க) என்று யெகோவா வாக்களித்தார். "உனக்குப் பெரிய பெயர் உண்டாகும்" என்று மற்றொரு மொழிபெயர்ப்பு கூறுகிறது. புதிய மொழிபெயர்ப்பில் பெரும்பாலானவைகளில் எதிர்கால வினைச் சொல் பயன்பட்டிருக்கிறது. அது ஆபிரகாமுக்குக் கடவுள் கொடுத்த வாக்குத்தத்தம் போலவே உள்ளது. (ஆதியாகமம் 12:2). அது தாவீதின் உயிர்த்தெழுதலைக் குறிப்பதாக இருக்கிறது. அவனுக்குள் காணப்பட்ட பெரிய விசுவாசம் நம்பிக்கையையும், கடவுளிடம் அவன் வைத்திருந்த உண்மை விசுவாசத்தையும் எடுத்துக் காட்டினதினால் அவனுடைய பெயர்





பிரஸ்தாபம் பூமியெங்கும் பரவினது. ஆனால் தாவீது தனது நற்குணங்களுக்கு பேர்பெற்றவனாக இராமல் அவன் செய்த குற்றம் மேலாக நிற்கிறது. எனினும் அவனுக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் அவனுடைய அன்றைய நிலைமையைக் கடந்து எதிர்காலத்தில் பேர் பெற உறுதியளித்தது. அவன் தனது மாளிகையில் அமர்ந்திருக்கையில் தன்னைப் பெரியவனாக நினைத்திருக்கலாம். (வசனம்1). ஆனால் வெகுசீக்கிரத்தில் நடக்கப்போகும் சம்பவங்களைக் கொண்டு, மனதில் எவ்வளவு பெலவீனனாக இருந்தான் என்பதை அவன் உணர வேண்டியதிருந்தது. ஆனால் அவனுடைய பெலவீனத்திலிருந்து அவனைத்தப்புவித்து, அவனைப் பெரியவனாக்கும்படி தேவன் வைத்திருந்த அவருடைய தீர்மானம் அவனைப் பூமியெங்கும் மேன்மைப்படுத்தக் கூடியதாக இருந்தது. ஏசாயா 24:23ல் இப்படியாக வாசிக்கிறோம்: "அப்பொழுது சேனைகளின் கர்த்தர் சீயோன் மலையிலும் எருசலேமிலும் ஆளுகை செய்வதால், அவருடைய (தாவீதின்) மூப்பர்களுக்கு முன்பாக மகிமை உண்டாயிருக்கும்."

அதற்குள் தனது நோட்டில் குறிப்புகளைக் கிறுக்கி எழுதிக்கொண்டிருந்த பீட்டர், "தயவுசெய்து கொஞ்சம் மெதுவாகப் பேசுகிறீர்களா?" என்று கெஞ்சி கேட்டுக்கொண்டான்.

அவனுக்கு உத்தரவு சொன்ன பிலிப்பு தொடர்ந்தார், "உன்னால் முடிந்தவரை வேகமாய் குறிப்பு எழுதிக் கொள்ளும்படி முயற்சி செய். ஏனெனில் இன்று மாலை இன்னும் அநேக காரியங்களை நாம் காணவேண்டியுள்ளது. நாம் கவனிக்க வேண்டிய அடுத்த குறிப்பு வசனங்கள் 10-11ல் உள்ளது."

"நான் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு ஒரு இடத்தை ஏற்படுத்தி, அவர்கள் தங்கள் ஸ்தானத்திலே குடியிருக்கவும், இனி அவர்கள் அலையாமலும், முன்போலும், நான் என் ஜனமாகிய இஸ்ரவேலின் மேல் நியாயாதிபதிகளைக் கட்டளையிட்ட நாள்வரையில் நடந்ததுபோலும், நியாயக்கேட்டின் மக்களால் இனிச் சிறுமைப்படாமலும் இருக்கும்படி அவர்களை நாட்டினேன். உன்னுடைய எல்லாச் சத்துருக்களுக்கும் உன்னை நீங்கலாக்கி, இளைப்பாறவும் பண்ணினேன். இப்போதும் கர்த்தர் உனக்கு வீட்டை உண்டு பண்ணுவார் என்பதைக் கர்த்தர் உனக்கு அறிவிக்கிறார்."

இது மிகவும் முக்கியமான குறிப்பு. தேவன் இஸ்ரவேலர் இளைப்பாறும்படி வீட்டை உண்டு பண்ணுவார் என்று சொல்லியுள்ளது. அந்த வசனத்தின் 'இனி' என்ற எதிர் காலச் சொல்லைக் கவனியுங்கள். அந்தச் சமயத்தில் இஸ்ரவேலர் தங்கள் சொந்த தேசத்தில் அமரிக்கையாய் தங்கியிருந்தாலும், அவர்களுக்கு எதிர்காலம் வாக்களிக்கப்படுகிறது.

"ஏன் யெகோவா இப்படிப்பட்ட முரண்பாடான காலங்களைக் குறித்த

வார்த்தையைப் பயன்படுத்த வேண்டும்?" என்று ராஜன் உன்னிப்பாகக் கவனித்து கேட்டான்.

பிலிப்பு அதற்கும் பதிலளித்தார். "ஏனெனில் தேவன் அதை அறிந்திருந்தார். தாவீதும் மோசேயின் ஆகமத்திலிருந்து (உபாகமம் 28:64; 29:22), இஸ்ரவேலர் தங்கள் கீழ்ப்படியாமையினிமித்தம் சொந்த தேசத்திலிருந்து விரட்டப்படுவார்கள் என்று கூறியிருந்ததை அறிந்திருந்தான். இஸ்ரவேலர் புறஜாதிகளின் நடுவே சிதறி, சத்துருக்களின் கைகளினாலே நசுக்கப்படுவார்கள் என்றும் அவன் அறிந்திருந்தான். ஆனால் இப்போதோ தாவீது ஒரு அற்புதமான வாக்குத்தத்தத்தைப் பெற்றான். அதன் மூலமாக, இஸ்ரவேல் மறுபடியும் தங்கள் சத்துருக்களின் பயம் நீங்கலாகி, என்றைக்கும் அமரிக்கையும் சமாதானமும் உள்ள ஒரு வாழ்க்கை வாழும்படி தங்கள் சொந்த தேசத்தில் தங்குவார்கள் என்ற வாக்குத்தத்தம் பிறந்தது. இஸ்ரவேலர் தங்கள் நீண்டவாழ்நாட்களில் இப்படிப்பட்ட நிபந்தனைகளை ஒருபோதும் பெற்றதில்லை. ஆதலால் தாவீதுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் 'இனி' நிறைவேறவேண்டியதாக இருந்தது. அந்த வாக்குத்தத்தத்தினாலே இஸ்ரவேலர் கொடிய உபத்திரவங்களால் நசுக்கப்பட்டாலும் இன்னும் தரித்திருக்கிறார்கள். மேலும் அவர்கள் சொந்த தேசத்துக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். இது தாவீதுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலைக் காண்பிக்கிறது. சுமார் 300 ஆண்டுகளுக்குப்பின் எரேமியா தீர்க்கதரிசி, தாவீதுக்குக் கொடுக்கப்பட்ட யெகோவாவின் வாக்குத்தத்தம் நிறைவேறியேதீரும் என்று உறுதியளித்தான். "நான் அவர்களுடைய (இஸ்ரவேலின்) சிறையிருப்பைத் திருப்பி, அவர்கள் மேல் என் இரக்கத்தைக் காண்பிப்பேன்" (எரேமியா 33:20-26 காண்க).

"அதைத்தான் தாவீதும் 24ம் வசனத்தில் சுட்டிக்காட்டுகிறான்" என்றான், ராஜன். ''உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலர் என்றைக்கும் உம்முடைய ஜனமாயிருப்பதற்கு, அவர்களைத் திடப்படுத்தி, கர்த்தராகிய நீர்தாமே அவர்களுக்குத் தேவனானீர்."

"அதே விதமாக 23ம் வசனத்திலும் அவன் கூறுகிறதைக் கவனியுங்கள்" என்று பீட்டர் தொடர்ந்தான். "உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு நிகரான ஜனமும் உண்டோ? பூலோகத்து ஜாதிகளில் இந்த ஒரே ஜாதியைத் தேவன் தமக்கு ஜனமாக மீட்கிறதற்கும், தமக்குக்கீர்த்தி விளங்கப் பண்ணுகிறதற்கும் ஏற்படுத்தினாரே."

உடனே வசந்தி, "அந்த வாக்குத்தத்தம் எப்படி நிறைவேறும்?" என்று கேட்டாள்.

தகப்பனார் பிரதியுத்தரமாக, "இயேசு கிறிஸ்து திரும்பி வருகையில், தம்மை





யூதமக்களுக்கு மேசியாவாக வெளிப்படுத்துவார். அவர் கையிலுள்ள காயங்களை அவர்கள் பார்ப்பார்கள் (சகரியா 13:6). பின்பு, தங்களுடைய ராஜாவை 2000 ஆண்டுகளுக்கு முன் சிலுவையில் அறைந்ததற்காக துக்கப்பட்டு புலம்புவார்கள் (சகரியா 12:10). அவரிடம் பாவமன்னிப்பைக் கோருவார்கள். அவர் அவர்களுடைய மீறுதல்களை மன்னிப்பார், அதைத் துடைத்துப் போடுவார். (மீகா 7:19). எலியாவின் மூலமாக (மல்கியா 4:5-6), கர்த்தர் யூதர்களைக் கூட்டிச்சேர்த்து, இயேசு கிறிஸ்துவைக் குறித்த சத்தியத்தைச் சொல்லும்படியாகவும் அவருடைய ஆட்சிக்கு அடங்கியிருக்கும்படியாகவும் அவர்களை வரவழைப்பார் (எரேமியா 30:11-20). பவுல் இயேசுகிறிஸ்து *''அவபக்தியை யாக்கோபிலிருந்து நீக்கிப்போடுவார்''* (ரோமர் 11:26) என்று எழுதியிருக்கிறான். *யெகோவா ஜனங்களுக்கு நியாயப் பிரமாணத்தைப் போதித்து, அவர்களைத் 'தமது ஜனமாக' ஏற்றுக் கொள்ளுவார். மறுபடியும் அவர்கள் அவரைத் தங்கள் கடவுளாக ஏற்றுக் கொள்ளுவார்கள்.* (எரேமியா 31:33). அதே தீர்க்கதரிசி கூறினான்: அவைகள் நிறைவேறும்போது, யெகோவா *"அவர்களுடைய மீறுதல்களை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பார்."* (வ.34). தாவீதுக்குச் சம்பந்தப்பட்ட மீதி வேதவசனங்களில் சிலவற்றை ஓசியா 1:10-11, ஆமோஸ் 9:11, சகரியா 14:11 போன்ற வசனங்களிலும் காணலாம்."

"இயேசுகிறிஸ்துவின் வருகையின்போது குடியிருக்கும் யூதர்கள் அனைவரும் தங்களுடைய தேசத்துக்குத் திரும்பி வந்துவிடுவார்களா?" என்று வசந்தி கேட்டாள்.

''இல்லை, அவர்களில் சிலர் கடவுளுக்குக் கீழ்ப்படியாமல், அழிக்கப்படுவார்கள்" (எசேக்கியேல் 20:37-38).

"யூதர்கள் அப்போது அழியாமையைப் பெறுவார்களா?" என்று விஜி கேட்டாள்.

“இல்லை, இந்த ஜீவியத்தில் கடவுளுக்குக் கீழ்ப்படிகிறவர்கள் (யூதரும் யூதரல்லாதவர்களும்) அழியாமையைப் பெறுவார்கள். மீதிபேர்கள் ராஜ்யத்தில் அழிவுள்ளவர்களாகவே பிரவேசிப்பார்கள் (ஏசாயா 65:17-23; சகரியா 14:16). ஆயிரவருட அரசாட்சியின் இறுதிப் பகுதியில் அழியாமையின் நம்பிக்கை பெறுவார்கள். அதில் கிறிஸ்து பூமியை ஆளுவார். (வெளிப்படுத்தல் 5:9-10; 1. கொரிந்தியர் 15:24-28).”

வேகமாகத் தனது குறிப்புகளை எழுதிக்கொண்டிருந்த பீட்டர் நடுவில், “வேறெந்த வாக்குத்தத்தங்களைத் தாவீது பெற்றிருந்தான் என்று சொல்லுங்கள்” என்றான்.

“வாலிபர் முகாம் கூட்டங்களில், மேற்கூறியவைகளைத் திரும்ப எடுத்துக் கூறுவதைப் பீட்டர் கேட்டால்தான் அவனுக்கு மனதில் பதியும்” என்று ஓரக்கண்ணால் அவனைப் பார்த்துக் கொண்டே கிண்டல் செய்தாள், வசந்தி.

“இது மிகவும் நேர்த்தியான பாடம். இதை ஒரே இரவில் பேசிமுடிப்பது கூடாத காரியம். அடுத்தபடியாகத் தாவீதுக்குக் கற்பித்த வாக்குத்தத்தம் நம்மையும் பாதிக்கக்கூடியது. ஏனெனில் அது குடும்பம் சம்பந்தப்பட்டது” என்றார், அவள் தந்தை.



அதற்கு வசந்தி, “அவர்தான் குடும்பஸ்தராக இருந்தாரே, பின்னே ஏன் அப்படி கூறுகிறீர்கள்?” என்று கேட்டாள்.

“ஆம், அது குறிப்பிட்ட ஒரு விதமான குடும்பத்தைக் குறிப்பதாகும்!”

ராஜன், “அப்படி எதையும் நான் கவனிக்கவில்லை. எங்கே அப்படி வாக்குப்



பண்ணப்பட்டது?” என்று கேட்டான்.

பிலிப்பு கவனமாகப் பதிலளித்தார். வசனம் 11ஐப் பார்த்தால் தெரியும். தாவீது கடவுளுக்கென்று ஒரு வீட்டைக்கட்ட விரும்பினான். ஆனால் கடவுள் அவனுக்கு உத்தரவாக, ‘இப்போதும் கர்த்தர் உனக்கு வீட்டை உண்டுபண்ணுவார்’ என்றார். வேதாகமத்தில் அடிக்கடி ‘வீடு’ என்று குடும்பத்தைக் குறித்து எழுதியுள்ளது. உதாரணமாக, ஏசாயா 22:21-24ல், ‘யூதாவின் வம்சம்,’ ‘தாவீதுடைய வீட்டின்,’ ‘தன் தகப்பன் வீட்டுக்கு’ என்று வாசிக்கிறோம். வீட்டின் வாசலைத் திறக்கும் ஒரு ‘சாவி’ போல இந்த வசனம் உள்ளது. அப்படிப்பட்ட வீடுகள் செங்கல் சுண்ணாம்பால் கட்டப்படாமல், ‘ஜீவனுள்ள கற்கள்’ கொண்டு கட்டப்படுகின்றன. ஆகையால், இந்த ஆச்சரியமான வாக்குத்தத்தத்தில், கடவுள் தாவீதிடம் இப்படிப்பட்ட ஒரு வீட்டைத் தருகிறேன், என்றார். எப்படியென்றால், தாவீதுக்குக் கொடுக்கப்பட்ட நம்பிக்கையைத் தழுவுகிற ஆண்களையும் பெண்களையும் அவர் நம்பிக்கை பெறச் செய்து, தாவீதின் குமாரனாகிய (மத்தேயு 1:1) இயேசுகிறிஸ்துவில் ஞானஸ்நானம் பெறும்படி அழைக்கிறார். இவ்வாறு அவருடைய ஆவிக்குரிய குடும்பத்தில் ஒரு அங்கமாகிறார்கள். கடவுள் மனுக்குலத்துக்குத் தரும் அழைப்பைப் பாருங்கள்: *“உங்கள் செவியைச் சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள்: கேளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும். தாவீதுக்கு அருளின் நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்.”* (ஏசாயா 55:3). கடவுளின் போதனைகளை ஏற்றுக்கொண்டு, அவருடைய சித்தத்தைச் செய்து, அவருடைய குமாரனில் ஞானஸ்நானம் பெறும் அனைவரும் தாவீதின் வீட்டில் அங்கமாகிறார்கள். தாவீது மகிமையில் உயிர்த்தெழும்போது, அந்த நாளில் ஒரு மகிமையான முடிவு அவர்களுக்கென்று வாக்குப் பண்ணப்பட்டுள்ளது: “அந்நாளிலே.... தாவீது குடும்பத்தார் அவர்களுக்கு முன்பாக தேவனைப்போலும் கர்த்தருடைய தூதனைப் போலும் இருப்பார்கள்.” (சகரியா 12:8).

உடனே வசந்தி சற்று ஆழமாகச் சிந்திப்பவளாக, “தாவீது தான் பெற்ற வாக்குத்தத்தத்திற்காக எவ்வளவாக சந்தோஷப்பட்டிருப்பான்!” என்றாள்.

“இப்போது நாம் வாசித்த வாக்குத்தத்தமானது மிகவும் ஆழமான கருத்து நிறைந்தது” என்று அவன் தகப்பன் தொடர்ந்தார். “இந்த அதிகாரத்திலிருந்து விளக்கமாக நான் பேசமுயலுவதின் நோக்கம் நீங்கள் இந்த போதனையைச் சரியாகப் புரிந்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். தாவீதுக்குப் பெரிய பெயரையும், பெருங்கூட்டமான ஒரு சந்ததியையும், அவனுடைய ஜனத்துக்கு மகிமையான எதிர்காலத்தையும் யெகோவா வாக்குப்பண்ணினபின்பு, அவனுடைய வழிதோன்றி பரம்பரையிலிருந்து எதிர்காலத்தில் ஒரு ராஜா தோன்றுவார் என்றும் வாக்களித்தார். 2 சாமுவேல் 7:12-14ல், தாவீதின் மரணத்துக்குப் பின், அவனுடைய

சந்ததியில் பிறக்கும் ஒருவரை ராஜாவாக நியமிப்பேன், என்று கர்த்தர் வாக்களித்தார். 'இந்த மகிமையான குமாரன் அல்லது வித்து, யெகோவாவின் நாமத்துக்கென்று ஒரு தேவாலயத்தைக் கட்டுவான். அவனுடைய ராஜ்யம் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் நான் அவருக்குத் தகப்பனாக இருப்பேன். அவர் எனக்குக் குமாரனாக இருப்பார்.' என்று வாக்களித்தார். இங்கு வாக்குத்தத்தத்தம் பண்ணப்பட்ட குமாரன் என்பவர் இயேசுகிறிஸ்துவைக் குறிக்கிறது. அவருடைய தாயாகிய மரியாளுக்கு அவர் பிறக்கும் முன்பே தேவதூதர்கள் கூறினர்: *"அவர் பெரியவராயிருப்பார். உன்னதமானவருடைய குமாரன் என்னப் படுவார். கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார். அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது"* (லூக்கா 1:32,33). இயேசு கிறிஸ்து தாவீதின் குமாரனும் தேவனுடைய குமாரனுமாக இருக்கிறார். இவர் தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்து இனிமேல் ஆட்சி செய்வார். அப்படிப்பட்ட ஒரு நிகழ்வுக்கு நேராக, இன்று யூதர்கள் தங்கள் தாய் மண்ணுக்குத் திரும்புகிறார்கள். இஸ்ரவேல் மறுபடியும் சீர்நிலை அடைகிறது. இயேசு கிறிஸ்து திரும்ப வருகையில் (அப்போஸ்தலர் 1:11; 3:19-25), அவர் இஸ்ரவேல் இழந்த மகிமையை மீண்டும் அவர்களுக்குக் கொடுத்து, அதன் பெருமையை நிலைநாட்டி, எருசலேமிலிருந்து பூமி முழுவதையும் ஆளுவார். எருசலேம் "சிங்காசனம்" என்று அழைக்கப்படும். அவருடைய அரசின் தலைமை பீடம் அங்கு இருக்கும்" (எரேமியா 3:17-18).

"தாவீதும் அங்கு இருப்பாரா ?" என்று விஜி விசாரித்தாள்.

"நிச்சயமாக" என்று உற்சாகத்தோடே பதிலளித்த பிலிப்பு தொடர்ந்து பேசினார். "நான் இன்று வாசித்த அதிகாரத்தின் 16ம் வசனத்தில் கர்த்தர் அவ்வாறு கூறியுள்ளார்." உன் வீடும், உன் ராஜ்யமும், என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும். உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும். 'உனக்கு முன்பாக' என்றால், 'தாவீதின் கண்களுக்கு முன்னால்' என்று பொருள்படும். இதே அர்த்தத்தில் வசனம் 15 இலும் உள்ளது. தாவீதுக்குச் சொல்லப்பட்டபடியே, அவனுக்கு வாக்களிக்கப்பட்ட கர்ப்பப் பிறப்பாகிய அவன் சந்ததி, தாவீது மரித்தப்பின், அவன் சிங்காசனத்தில் என்றென்றைக்கும் உட்காருவார் (வசனம் 12). மிகத் தெளிவாக இவைகளைக் ''காணும்படி''யாகத் தாவீது திரும்பவும் உயிர்த்தெழவேண்டும். தாவீதும் இப்படித்தான் தனது வாக்குத்தத்தத்தைப் புரிந்துகொண்டான். சங்கீதம் 49:15ல் தாவீதுகூறுகிறான்: "தேவன் என் ஆத்துமாவைப் பாதாளத்தின் வல்லமைக்குத் தப்புவித்து மீட்டார்." மேலும், சங்கீதம் 71:20-21ல், "அநேக இக்கட்டுகளையும்



ஆபத்துகளையும் காணும்படி செய்த என்னை நீர் திரும்பவும் உயிர்ப்பித்து, திரும்பவும் என்னைப் பூமியின் பாதாளங்களிலிருந்து ஏறப் பண்ணுவீர். என் மேன்மையைப் பெருகப்பண்ணி, என்னை மறுபடியும் தேற்றுவீர்'' என்றும் கூறுகிறான்.

"வேதாகமம் எவ்வளவு அழகாக எல்லாவற்றையும் கோர்த்துத்தருகிறது.!" என்று ராஜன் மகிழ்ந்தான்.

"இந்த அதிசயமான புஸ்தகத்தின் உண்மை அழகு இதுவே" என்று அவன் தகப்பன் பதிலுரைத்தார்.

"என்னுடைய நாமத்திற்கென்று அவன் ஒரு வீட்டைக் கட்டுவான்" என்று ஆண்டவர் சொன்னதன் கருத்து என்ன ? என்று பீட்டர் கேட்டான்.

அதற்குத் தகப்பனார், "இயேசு கிறிஸ்துவின் இருவகையான கிரியைகளைக் குறிக்கிறது. அவர் இன்று கர்த்தருடைய மகிமைக்கென்று ஜீவனுள்ள கற்களைக்கொண்டு ஒரு "வீட்டைக்" கட்டுகிறார். அது குறித்து அப்போஸ்தலர் 15:14ல் பேதுரு பேசுகிறான்:" தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்து கொள்ளும்படி முதல்முதல் அவர்களுக்குக் கடாட்சித்தருளினார். அவன் இந்த ஆவிக்குரிய "வீட்டை" விசுவாசிகளுக்கு ஒப்பிட்டு, ''ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகக் கட்டப்பட்டுவருகிறீர்கள்" என்று 1 பேதுரு 2:5ல் விளக்குகிறார். இது கர்த்தருடைய இப்போதைய வேலை. கிறிஸ்துவுடைய வருகையில் இந்த வேலை பூர்த்தியாகி விடும்.

அதோடுகூட எருசலேமில் இயேசுகிறிஸ்து சகல ஜனங்களுக்கென்றும் ஒரு தேவாலயத்தைக் கட்டுவார். அது மகிமையுள்ள ஜெபவீடு என்னப்படும். (ஏசாயா 56:7). இந்த தேவாலயத்திலிருந்து எல்லா மனிதருக்கென்றும் நியாயப்பிரமாணமும் கட்டளைகளும் புறப்படும் (ஏசாயா 2:2-4). உலகத்தின் எல்லாப் பாகங்களிலுமிருந்து ஆராதிக்கிறவர்கள் தெய்வீக ஆராதனைக்கென்று எருசலேம் தேவாலயத்துக்கு வந்து செல்வார்கள் (சகரியா 14:16). எசேக்கியேல் தீர்க்கதரிசனங்களின் முடிவில் (அதிகாரங்கள் 40 முதல் 48 வரை), எழும்பப் போகிற அந்த உன்னதமான கட்டடத்தின் வரைபடம் விளக்கப்பட்டுள்ளது. வேதாகமம் முழுவதிலும் அதற்குச் சம்பந்தப்பட்ட நூற்றுக்கணக்கான வேத வசனங்கள் எழுதப்பட்டுள்ளன. இந்த ஆலய ஆராதனையில் பங்கெடுப்பதும் அதன் அழகை ரசிப்பதும் தாவீதின் வாஞ்சையாக இருந்தது. (சங்கீதம் 27:4). இந்த "சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு" அனைத்து மனுக்குலத்தையும் ஒரே மகிமையான ஆராதனைக்குள் இணைக்கும். அது அனைவரையும் சத்தியத்தில் கடவுளுக்கு முன்பாக ஒன்றுசேர்க்கும். அதனால் இனி ஒருபோதும் மனிதர் நன்மை தீமை இன்னது என்று குழப்பம்

அடைவதில்லை. இவைகளெல்லாம் தாவீதுக்கு இந்த அதிசயமான அதிகாரத்தில் வாக்களிக்கப்பட்டது."

"இந்த அதிகாரத்திலிருந்து நீங்கள் சொன்னவைகளைக் குறித்து எனக்குச் சந்தேகம் இல்லை. ஆனாலும்" என்று இழுத்த ராஜன், "ஒன்று எனக்கு எப்போதும் புரியாததாக இருந்து வந்துள்ளது. அது என்னவென்றால், 1 நாளாகமம் 22:9-10ல் தேவனுடைய வாக்குத்தத்தம் சாலொமோனில் நிறைவேறினதாகக் கூறுகிறது. ஆனால் அது இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது என்று நீங்கள் எப்படி கூறுகிறீர்கள்?" என்று வினவினான்.

அவனுக்கு உத்தரவாகத் தகப்பனார், "அந்த வாக்குத்தத்தம் சாலோமோனுக்கு நிழலாட்டமாக பொருந்தினது. சாலொமோனைப்பற்றி அதேவிதமான வார்த்தைகள் பேசப்பட்டுள்ளன. அவன் எனக்குக் குமாரனாயிருப்பான் என்று கர்த்தர் சொன்னது, தெரிந்தெடுத்தவர்களிடம் பொதுவாகப் பேசின வார்த்தைகளைப் போன்றதாகும். ஆனால் உண்மையில் இயேசுகிறிஸ்துவைப் போல் அவன் தேவகுமாரனாகி விட முடியாது. மேலும் 1 நாளாகமம் 28:5-6ம் வசனங்களில் தாவீது கூறுகிறான். *"கர்த்தர் எனக்கு அநேக குமாரரைத் தந்தருளினார். ஆனாலும் இஸ்ரவேலை ஆளும் கர்த்தருடைய ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தின்மேல் உட்காருகிறதற்கு அவன் என்னுடைய எல்லா குமாரரிலும் என் குமாரனாகிய சாலொமோனைத் தெரிந்து கொண்டார்"* என்றான். இயேசு கிறிஸ்து தமது பிறப்பிலேயே தேவனுடைய குமாரனாகத் தோன்றினார். ஏனெனில் அவருக்குத் தேவன் பிதாவாக இருக்கிறார். மேலும், தாவீதுக்கு 2. சாமுவேல் 7ல் கூறப்பட்ட வாக்குத்தத்தங்கள் அவனுடைய சாவுக்குப் பின் நிறைவேறுவதாக இருந்தது (வச.12). சாலொமோன் தனது தகப்பன் உயிரோடிருக்கும் போதே சிங்காசனத்தில் உட்கார்ந்து விட்டான்."

"அதில் மற்றொரு குறிப்பும் உள்ளது" என்று கூட்டிப்பேசின பீட்டர் தொடர்ந்தான். "தாவீதுக்கு வாக்களிக்கப்பட்ட குமாரன் என்றென்றைக்கும் அரசாள வேண்டியவராக இருந்தார். (1. நாளாகமம் 17:14). சாலொமோன் அந்த வார்த்தைகளை நிறைவேற்றவில்லை."

பின்பு பிலிப்பு பேசினார்: "முடிவான வாதம் என்னவென்றால், தாவீதும் சாலொமோனும் மரித்து நூற்றுக்கணக்கான வருஷங்கள் கடந்து சென்றாலும், மேற்படி வாக்குத்தத்தத்தைக் கொண்டு அது நிறைவேறவேண்டியதாகப் பேசி வந்துள்ளனர். (எரேமியா 23:5-6; 33:15-17; ஏசாயா 9:7; மாற்கு 11:10; அப்போஸ்தலர் 15:15-16; வெளிப்படுத்தல் 3:7 முதலியன). இயேசு கிறிஸ்துவின் பிறப்பு அதன் நிறைவேறுதலின் ஒரு பங்காக இருந்தது (லூக்கா 1:69-70). மேலும் எபிரெயர் 1:5ல் அதன் ஆசிரியர் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்பிட்டுப் பேசுகையில் 2.சாமுவேல் 7:14ஐ அப்படியே எடுத்துக் கூறியுள்ளான். கடைசியாக, பேதுரு தனது நற்செய்தி அருளுரையில், இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கும் மகிமைக்கும் தாவீதின் வாக்குத்தத்தத்தைச் சம்பந்தப்படுத்திப் பேசினான் (அப்போஸ்தலர் 2:30-34)."



ராஜன், "பதினாலாம் வசனத்தின் அர்த்தம் என்ன? அதில்: 'அவன் அக்கிரமம் செய்தால், நான் அவனை மனுஷருடைய மிலாற்றினாலும் மனுபுத்திரருடைய அடிகளினாலும் தண்டிப்பேன்' என்று எழுதியிருக்கிறதே" என்று வினவினான்.

அதற்கு தகப்பனார், "திருத்திய பொழி பெயர்ப்பின்படி, 'இயேசுகிறிஸ்து குற்றஞ்செய்தால், அவர் நிரந்தரமாக மரணத்தின் பிடியில் சிக்கியிருப்பார்' என்று எழுதப்பட்டுள்ளது. அதன்படி, அவர் பாவஞ்செய்தால், அவர் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட மாட்டார். அதனால் உலகத்தின் இரட்சகராகச் செயல்பட்டிருக்க முடியாது. எனினும் இதைவிடச் சிறப்பான அர்த்தங்கள் இந்த வசனத்தில் மறைந்து கிடக்கின்றன. ஆடம் கிளார்க் இந்த வசனத்தைப் பின்வருமாறு மொழிபெயர்த்தார்: "அக்கிரமத்துக்காக அவன் படும் துன்பத்தில், மனிதருக்குரிய பிரம்பாலும், ஆதாமின் மக்களுக்குரிய சாட்டை அடிகளாலும் தண்டிப்பேன்." இந்தமொழி பெயர்ப்பை நாம் ஏற்றுக் கொண்டால் அதன்படி இயேசு கிறிஸ்து தமது பிறப்பின் தன்மையினால் மரணத்தீர்ப்புக்குள்ளாவார். உண்மையில் நடந்த காரியம் அதுதான். அவர் மனித குலத்தை மீட்கும்படி 'மரணத்தை உத்தரித்தார்.' 'யூரேக்காவில்' ஜான்தாமஸ் எழுதிய மொழிபெயர்ப்பு இப்படி கூறுகிறது:" அவனை அவனது தன்மையில் குனியவைத்து, அவனை மனித ஆட்சிகோலாலும், ஆதாமின் புத்திரரிடமிருந்து வந்த அடிகளாலும் தண்டிப்பேன் (இரண்டாம் நூல், பக்கம் 28). இந்த மொழிபெயர்ப்பில், அவர் தண்டிக்கப்படுவது யார் மூலமாக என்று கூறுகிறது. இதே வசனத்தை ஏசாயா 53 உடன் ஒப்பிடலாம். ஆனால் நாம் வேண்டிய அளவு வேத ஆராய்ச்சியை இன்று மாலை செய்து முடித்தாக நினைக்கிறேன். எனினும் தாவீதுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தை மறுபடியும் இரத்தின சுருக்கமாக பார்க்கலாம். அவன் பெற்ற வாக்குறுதிகள்:

1. தனது உயிர்த்தெழுதலின்போது எதிர்காலத்தில் அவனுக்கு மேன்மையான பெயர் கிடைக்கும். (வச.9)

2. இஸ்ரவேல் எதிர்காலத்தில் மகிமையாகத் தங்கள் சொந்த தேசத்தில் திரும்ப சேருவார்கள். ஒருபோதும் அங்கிருந்து அவர்கள் நீங்குவதில்லை. (வச.10)

3. மகிமை நிறைந்த பெருங்கூட்டமான ஒரு சந்ததி (அல்லது வீடு) பலஜாதிகளை ஆட்சிசெய்யும்படி உதவும் (வச.11)

4. ஒரு நித்திய சிங்காசனம் மற்றும் ராஜ்யத்தில் அவருடைய ஆட்சி இருக்கும் (வச.12)

5. சந்ததியில் ஒருவர் தேவனுடைய குமாரனாகவும், தாவீதின் குமாரனாகவும் இருப்பார். தம்மிடம் வருகிற அனைவருக்கும் பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் மீட்கும் வழியை உண்டாக்குவார். அவர் தாவீதின் சிங்காசனத்தில் என்றென்றைக்கும் அரசாளுவார். (வச.16; 1 நாளாகமம் 17:14).

6. பாதாளத்திலிருந்து தனிப்பட்ட உயிர்த்தெழுதலையும் நித்தியஜீவனையும் பெறலாம் (வச.16).

“கர்த்தர் தமது மிகுந்த இரக்கத்தின்படி, இப்படிப்பட்ட அருமையான எதிர்காலத்தை நமக்கு வைத்துள்ளார் என்பதை நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டும் (ஏசாயா 53:3). எனினும் இன்றைக்கு இதுபோதும். நேரமும் அதிகமாகச் சென்றுவிட்டது. வசந்தியும் விஜியும் அம்மாவுக்கு உதவி செய்து விட்டு படுக்கச் செல்லுங்கள். எனக்கும் முடிக்க வேண்டிய கடமைகள் உள்ளன. போய் வாருங்கள்.”

## தாவீது வாக்குத்தத்தத்தை எப்படி நோக்கினான்

தேவனுடைய ஆச்சரியமான வாக்குத்தத்தம் தாவீதின் ஜீவியத்தின் அளவற்ற மதிப்பீட்டைக் கொடுத்தது. அவனுக்குக் கொடுக்கப்பட்ட மதிப்பினிமித்தம் அவன் தன்னைத் தாழ்த்தினான். அவன் பிறந்து வளர்ந்தது, பெத்லகேமிலுள்ள சாதாரண குடும்பத்தில். தாவீதைக்குறித்து கவுல் அடிக்கடி பேசும்போது, ‘ஈசாயின் குமாரன்’ என்று ஈனமாக சொல்வது வழக்கமாக இருந்தது. ஆனால் அவன் பேசின ஆட்டுமேய்ப்பன் இப்போது ராஜாமாத்திரம் அல்ல; அவன், உலகத்தின் இரட்சகரும் மகாராஜாவுமானவருக்கு முற்பிதாவாகவும் மாறினான். தாவீதின் ராஜ்யம், சிங்காசனம் மற்றும் மகிமையை ஒருநாள் எல்லோரும் புகழுவார்கள். அதைக் காணும்படி அவனும் அங்கே இருப்பான்.

இந்த ஆச்சரியமான வாக்குத்தத்தத்தைப் பெற்ற தாவீதின் தாழ்மையான மனதோடு, அவன் சீயோனுக்கு கர்த்தருடைய பெட்டியை எடுத்துச் சென்றான். அங்கு தன் இருதயத்தை ஊற்றி இரக்கமுள்ள பரமபிதாவை ஸ்தோத்தரித்தான். தாவீது ஜெபிக்கையில், *“தேவரீர் என்னை இது வரைக்கும் கொண்டுவந்ததற்கு, நான் எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம்? கர்த்தராகிய ஆண்டவரே, இது இன்னும் உம்முடைய பார்வைக்குக் கொஞ்ச காரியமாயிருக்கிறது என்று கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற தேவரீர் உம்முடைய அடியானின் வீட்டைக்குறித்து, வெகு தூரமாயிருக்கும் காலத்துச் செய்தியை மனுஷர் முறைமையாய்ச் சொன்னீரே”* என்றான். (2. சாமுவேல் 7:18-19).

தாவீது இந்த வாக்குத்தத்தத்தை ஏவாளிடம் ஏதேன் தோட்டத்தில் அளித்த வாக்குறுதியுடன் இணைத்தான். அவன் கூறினது, “அது ஆதாமின் போதனை” அதாவது “மனுஷர் முறைமையாய்ச் சொன்னீர்” என்பதாகும். தனக்கும் இஸ்ரவேலருக்கும் அருளப்பட்ட மகாமேன்மையைக் கேட்ட தாவீது தாங்கமுடியாமல் அவனுக்கு வார்த்தைகள் பிறக்கவில்லை. தான் அதற்குத் தகுதியற்றவன் என்று அவன் நினைத்தான். *“உம்முடைய வாக்குத்தத்தத்தினிமித்தமும், உம்முடைய சித்தத்தின்படியேயும், இந்தப் பெரிய காரியங்களை யெல்லாம் உமது அடியானுக்கு அறிவிக்கும்படிக்குத் தயவுசெய்தீர்.”* (2 சாமுவேல் 7:21).

வாக்குத்தத்தத்தின் நம்பிக்கை எப்போதும் தாவீதின் நாவில் இருந்தது. கர்த்தருக்கு ஆராதனை செய்யும் அநேக சங்கீதங்களை அவன் பாடினான். அவைகளின் மூலம் கர்த்தர் தனக்கு அருளின வாக்குத்தத்தங்களை நினைவுகூர்ந்தான். அவைகள் நிச்சயமாக நிறைவேறும் என்ற நம்பிக்கையுடன் பாடினான். கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தத்தை ஆணையாக உறுதிசெய்தார். *“ஒருவிசை என் பரிசுத்தத்தின் பேரில் ஆணையிட்டேன், தாவீதுக்கு நான் பொய் சொல்லேன்.”* (சங்கீதம் 89:35). தாவீது ராஜா கடவுளைக்குறித்து, அவர் தமது வாக்குத்தத்தத்தின்படி தனது சந்ததியை எருசலேமிலுள்ள மகிமையின் சிங்காசனத்தில் (சங்கீதம் 132:11), தமது நியாயாசன ஆட்சியின்கீழ் (சங்கீதம் 72), ராஜரீகம் பண்ணுகிறார் (சங்கீதம் 99), என்று பாடினான்.

அவனுடைய கடைசிகால வார்த்தைகளில், வரப்போகிற இந்த மகாபெரிய ராஜாவின் குணாதிசயம் குறித்துப் பேசினான். அவர் நியாயம் செய்கிறவர். தேவ பக்தியோடே ஆட்சி செய்வார். அவர் விடியற்கால வெளிச்சத்தைப் போல, இரவின் இருளை அகற்றி, தமது ஆட்சியின் ஞானத்தில் ஜனங்களைக் கொண்டுவந்து அவர்களுக்குப் போதிப்பார். வரப்போகிற கிறிஸ்துவின் ஆட்சியைக் குறித்து, “மேகம் இல்லாத காலை”க்கும், ஜனங்களின் நிலைமையைக் குறித்து, “இளம் புல்லின் குருத்து” மழையையும் சூரிய வெளிச்சத்தையும் கண்டு, செழிப்பான பச்சையாக வளருவதற்கும் ஒப்பிட்டுப் பாடியுள்ளான்.

அவன் தனது குடும்பத்தாரைக் காணும்போது, அவர்களில் யாருமே தனக்கு வாக்களிக்கப்பட்டவரைப் போல, அவர்களில் யாரும் இல்லை என்ற முடிவுடன் காணப்படுகிறான். எதிர்காலத்தில் எதிர்பார்த்த மேசியாவின் வருகையை எதிர் நோக்கியிருக்கிறான். தாவீதால் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தில் எந்த நிறை வேறுதலையும் கண்டிராத காலத்தில் பாடமுடிந்தது: *“என்னுடைய வீடு தேவனிடத்தில் இப்படியிராதோ? சகலமும் திட்டம் பண்ணப்பட்டிருக்கிற நிச்சயமான நித்திய உடன்படிக்கையை என்னுடன் அவர் செய்திருக்கிறார். ஆதலால் என்னுடைய எல்லா இரட்சிப்பும் எல்லா வாஞ்சையும் வளர்ந்தோங்கச் செய்யாரோ?”* (2. சாமுவேல் 23:1-5).